உ

சிவகணபதிதுணை.

தஞ்சைபாநகரைச்சார்ந்த

வல்லமாநகரம்

மணிமுத்தாநதிக்கரைச் சுப்பிரமணியர்

தோத்திர மஞ்சரி.

இஃது

ஷை கோயிற்றிருப்பணி செய்கின்ற

கண்டனூர். சு. நா. சிவராமச்செட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

வல்லமாநகரம் பரிமணவாத்தியார் குமார

பாலகவி நமசிவாயப்பிள்ளையால

இயற்றப்பெற்று

தஞ்சாவூர் சதாவதானம்

பிரம்மஸ்ரீ-சுப்பிரமணிய ஐயர் அவர்களால்

பார்வையிடப்பட்டு

தஞ்சை வித்தியா விநோதினி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்கஹு சித்திரைமீ

1907.

உ

சிவமயம்.

சிறப்புக்கவிகள்.

தஞ்சாவூர்
பிர்மஸ்ரீ-சதாவதானம் சுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றியது.

பூமேவுந் தளிர்ப்பொழில்சூழ் வல்லநகர் மணிமுத்தப்
பூந்துறைக்கண்
மாமேவுங் குட்டரேச னடிமலரிற் பாமாலை
வனைந்த ணிந்தான்
மீமேவுந் திருக்கண்ட னூர்ச்சிவரா மக்குரிசில்
விருப்பிற்கேட்ப
நாமேவும் பாலகவி நமசிவா யப்புலவன்
நயக்க மன்னோ.

உ

பழனி ஸ்ரீலஸ்ரீ-மாம்பழக்கவிச்சிங்க நாவலவர்
மாணவரும்
கன்னிவாடி ஜமீன்சமுகவித்துவானுமான உடுமலைப்
பேட்டை ஸ்ரீமன்-முத்துச்சாமி சரபகவியவர்கள்
இயற்றிய விருத்தம்.

குடந்தருங் கொங்கை மடந்தையர் சோலைக்
குளந்தொறும் புனல் விளை யாடு
மிடந்தருங் காட்சி யிலங்குமா வல்ல
மெனும்பதிப் பரிமண வசந்தன்

றிடந்தரு வாசு தேவபுத் திரனுந்
திமிர்மண நமசிவா யப்பே
-ந்தையெம் பால கவிகிஷ்ண லோல
னுரையெலாஞ் சிலேடையினுவப்பே.

வெண்பா.

ந்தக் கவிக்கு மிதுவேமே லென்றுரைக்குஞ்
சந்தக் கவிமாலை சாற்றினு—னந்தொடுநீர்
பாயும்வல்லம் வேலனுக்குப் பால கவிநமசி
வாயனென்னு நேயவித்து வான்.

உ

சபாநாயகர்துணை.

வல்லமாநகரம் கனம்- க. குப்புசாமி மூப்பனுரவர்கள்
இயற்றிய
எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மணியினங்க ளொளிர்பழன வல்ல மேவு
மணிமுத்த நதிக்கந்தன் மலர்ப்பா தத்திற்
கணியமிர்த தோத்திரமஞ் சரியைச் சொன்னு
னவணிமகிழ் தமிழ்க்கவிதை பொழியுங் கொண்ட
லணிவளருஞ் சரபகவிக் கற்றுச் சொல்லி
யாகநம திடங்கல்வி கற்ற மாணன்
றணிவில்புகழ்ப் பரிமணவேள் தந்த பாலன்
சம்பன்ன னும்நமசி வாயன் றனே.

உ

சிவகணபதிதுணை.

வல்லமாநகர்

மணிமுத்தாநதி

சுப்பிரமணியர் பதிகம்.

விநாயகர்காப்பு வெண்பா.

திருவாழும் வல்லநகர் சேர்மணிமுத் தாற்றங்
கரைவாழு மெங்கட் கதிர்வேற்—பெருமான்
பதிகத்தைப் பாடவருட் பாரதந்தி மாவன்
பதிகத்தைத் தந்தருளு மால்.

ஆசிரியவிருத்தம்.

கடலெழுங் கதிர்மணிக் கிரணதட மகுடமுங்
கமலமல ரனைய முகமுங்
கருணைபொழி விழிகளுங் கனிமதுர வாயுங்
கனக்குழை துலங்கு செவியுந்
திடமிகுந் தோளுங் கடப்பணியு மார்புஞ்
சிவந்திட விளங்கு வேலுஞ்
சேவலங் கொடியுமெம் பாவந் தவிர்க்குஞ்
சிலம்பொலி யலம்பு தாளுங்
குடமுறுங் களபங் கொளுங்குயக் குஞ்சரி
குறக்கன்னி யுந்தோன்ற வே
குணநடன சித்ரமயி லொடுமெமது முன்வந்து
கூர்ந்திரட் சித்தருள்க வே

மடலூறுங் கேதகை மணந்தர வளங்குலாம்
வல்லமணி முத்த நதியில்
பவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (க)

தம் விடங்கெழு களப்பிரான் றந்திடுந்
தந்திமுக வைங்கர னையுஞ்
ங்கமுறு கந்தரியெ னம்பிகையை யும்பரவர்
சங்கடம் விடும்படிசெய் வேற்
கந்தனெனு நின்றனையு மஞ்சலி புரிந்திடு
கனங்கொண்ட தொண்டர் பாதங்
கண்டுநல மென்றுபெறு வன்கொலென வன்பொடு
கலங்குமெனை யிங்காளு வாய்
செந்திரு விளங்குதட மெங்குநற வங்கமழ்
செழுங்கனி நிறைந்த பொழிலிற்
றிங்களை யலங்க்ருத பளிங்கென வுளங்கொடு
தெளிந்தஞ்ச னந்தீட் டிடும்
மந்திகண் மிகுந்ததுரு மஞ்செறி வளம்பெருகு
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (உ)

மண்ணினிற் சீவவதை செய்ததற் கேற்றவழி
வம்பாய்ப் பிதற்றி நின்று

வந்தவை வரட்டுமெல் லாமவன் செயலன்றி
மற்றணுவு மசையா தெனுத்
திண்ணமாய்ச் செய்திடும் பாவஞ் சுபாவமாய்த்
திரிகின்ற மடய ருடனே
தேவேது பசுவேது பாசமே தில்லெனச்
செப்பிக் குதர்க்க மிட்டுக்
கண்ணுங் கருத்துமுல கத்துவிவ காரங்
களிற்சில வழித்த தன்றிக்
கையினெல் லிக்கனிநி கர்த்திடு நினக்கடிமை
காட்டிலே னுய்குவே னோ
வண்ணக் கவிப்புலவ ரெண்ணப் படிக்குதவு
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (ரு)

நினக்கென்று முண்மையாய்த் தொண்டுசெயு நின்பேர்
நிலைத்தவொரு வனையிந்த வூர்
நிலவுந்துருக்கமத வலவன் குறித்தவ
னிசப்பத்தி வெளிகாண வே
கனக்கின்ற கைச்சொம்பி லுள்ளபால் யாவருங்
ணவே யொங்குமோ நீ
காட்ட ங் கூடுமோ வென்றிடவு மன்னவன்
கருதிநினை யெண்ணி யன்னோன்
முனத்தரையில் வைத்தொரேமனதாக வெளிவெய்யின்

முன்பாக வேப டுக்க
முறையினு லதுமேலு மளமள வெனப்பொங்கி
முழுதுமோ டியது போலென்
மனப்பாலி னின்னடிக் கன்புபொங் கிடவருள்க
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுந் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (௪)

இந்திரன் கவுதமர்மு னிட்டசா பத்தினு
லிந்த்ரகீ லக்கிரியி னி
லெய்திச் சடாமுடிக் கடவுளை யருச்சித்
திடும்போது கங்கை யாடி
வந்திடினுன் மேனியுறு குறியெலாங் கண்ணுக
மாறுமென் றவரருள் செய
வச்ராயு தத்தினுற் பாதாள கங்கையவன்
வரவழைத் திங்கு மூழ்கிச்
சுந்தரம் பெற்றதென என்றன்மன மாசெலாந்
தூளிபட ஞான விழியைத்
துங்கமுற நீமலர்ந் தருளிவாழ் வித்தருள்க
சூரனு தியரை யடர
வந்தவே லாயுதா மலர்மக ளுறைந்துவாழ்
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (௫)

தற்பர நினக்காக வைப்பசிச் சுக்லபட்
சத்தினிற் பிரதமை முதற்
சட்டியீ ருகவு மநுட்டிக்கு நாளாறு
தம்மிலுப வாச மேவி
யற்பமுஞ் சிந்தைவே ருகாது திருமுருக
ராற்றுப் புடைப்ர பந்த
மணிதிருப் புகழ்திரு வருட்பா வலங்கார
மநுபூதி யாதி யோதி
யுற்பவ மொழித்திலேன் கற்பன படித்திலே
ஞெருகார்த்தி கையினு யினும்
முயர்சூர் தடிந்தவுன் சந்நிதா னத்தினி
லுகந்துகவி சொல்ல கில்லேன்
மற்பவங் கொண்டேன் பயங்கெடந லருள்புரிக
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (கூ)

துன்பமே மேலிட்ட வென்போலு மொருபாவி
தோன்றிலா னென்ற வுலகிற்
சொல்லொணு நோயால் வருந்தியுஞ் சண்டாளர்
தூடணைக் கூளா கியும்
அன்பிலா மற்றிரிந் தடியேன் படும்பா
டறிந்தும் பொறுத்து வந்தே
யணுவாகி லுந்தயவு கூரா திருப்பது

ணருட்கென்று மழகாகு மோ
பொன்புணர் தரும்பழனி யம்பதிக் கேகவரு
பொற்பார்ந்த காவடி யெலாம்
புண்யரின் சந்நிதா னத்தினிறை வேற்றப்
புரிந்தருளி யருளற் புதா
மன்பதை மகிழ்ந்தவடி வேலாயு தாபுநித
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (எ)

ஆக்குதற் கரிதான கங்கையின் குழவியா
யம்மையின் கைம்மதலை யா
யாலவாய் வளர்மூகை யானமக னய்க்காழி
யவதார நற்சிறுவ னய்
மேக்கெழுந் தந்திமுக னர்க்கருட் டம்பியாய்
வீரவா குவினண்ண லாய்
வேடர்க்கு நாடுவிண் ணுடற்கு மருகனய்
வேற்கரங் கொள்வீர னய்க்
காக்குதே வானைகுற மானிருவ ருக்குங்
கனிந்திடு மணாள னயெக்
கலையுமுணர் தமிழ்முனிவர் கடவுளர் தமக்குமருள்
காட்டுமொரு ஞான குருவாய்
மாக்கருணை கொண்டநீ யடிமையெனை யாக்கொள்க
வல்லமணி முத்த நதியில்

வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (அ)

உன்னையான் வேண்டுவது கோடியொ டிலக்கமல
வுயர்நூறு மல்ல வல்ல
ஒருவிடய மாத்ரமே யுள்ளே யொளிக்கா
துரைப்பேன் மறக்காம லே
தன்னிகரு முடனுடி நிலைபெயர்ந் தையமது
சந்தேக மாகிமுது கந்
தண்டிருந் தொளிர்மூளை தாங்குநடு நாடியுந்
தானற்று விட்ட வேளை
பின்னுகப மேலாடி மேன்மூச்சு வாங்கிவாய்
பேசிடா தறிவ ழிந்து
பிச்சாய்ப் பிதற்றியங் கிறவாத முன்னமுன்
பெருகருட் பிரகாசம் நான்
மன்னும் படிக்கருணை மட்டும் புரிந்தருள்க
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (கூ)

ஏனையா யின்னுமென் மேல்வன்ம மாவுனக்
கிதுவுமோ ரழகாகு மா
ஏழைக் கிரங்குவ துனக்கியல்பு மல்லவா
யான்மட்டு மபசார னு

போனதெல் லாம்போக இனியாகி லுந்தயை
புரிந்திடென் றென்ன விலையா
புவியிலு மிலாதவென் பாவம் பொறுத்தவொரு
புண்ணியனு நீயல்ல வா
ஆனைவிட் டுப்பிரிகி லாக்கன்று போலுன்னை
யகலா திருக்க விலையா
ஆறுனு நின்பாத மறவாத வரமுதவி
யல்லல்தீர்த் தாள வேண்டும்
வானமுத வாரியே மயிலேறு மையனே
வல்லமணி முத்த நதியில்
வருபவப் பிணிதணிய வுருகியுத் தமர்பணிய
மருவுசுப் பிரமணிய னே. (ய)

வல்லம் மணிமுத்தாநதிச் சுப்பிரமணியர்

விருத்தப்பத்து.

விநாயகர்காப்பு கலிவிருத்தம்.

சீருலாந்திரு சேர்வல்ல மாநகர்
நாருலாமணி முத்த நதிக்கரைப்
பாருலாம்பழ னிக்குகன் பாடற்குக்
காருலாந் தந்தி யேரம்பன் காப்பரோ.

எழுசீர்விருத்தம்.

பூவடி தேறல் சாலியை வளர்க்கும்
புதுமைசேர் வல்லமா நகரிற்

கூவிளச்சோலை மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
மூவடிகேட்ட மாயனு முணரா
மூலகா ரணமுழு முதலே
கூவியே யழைத்தேன் சேவடி யெனக்குக்
கொடுத்திட வடுத்துவந் தருளே. (க)

சித்திர கோடி சிறந்தகோ புரஞ்சூழ்
தெருமலி வல்லமா நகரிற்
கொத்தலர் மணக்கு மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
பத்தியு மில்லேன் சுத்தனு மல்லேன்
பாரினு மிலாவெகு பொல்லேன்
சித்தியே விளங்க நித்திய பாத
தெரிசனம் பெறவுவந் தருளே. (உ)

வாட்டடங் கண்ணார்க் கூட்டமார் மாடம்
மல்லல்சேர் வல்லமா நகரிற்
கோட்டினம் வீசு மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
பாட்டியற் கிளிசொல் கேட்டருள் பரமா
பயிலுமா மயிற்பிர சன்னா
தாட்டுணை யருளக் காட்டிய படியே
தந்திட வந்துவந் தருளே. (ந)

துதித்திடுமடியார் மதித்திடுஞ் சுகிர்தா
சோலைசூழ் வல்லமா நகரிற்
குதித்துமீன் பாயு மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
கொதித்திடுஞ் சினத்துக் கொலைக்கதிர்வேலா
குக்குடக் கொடியுடைக் குழகா
நிதித்திடும் நினது பதத்துணை வாழ்த்தித்
திருந்தவே பொருந்திவந் தருளே. (௪)

தருமல ருருக்குந் தடந்தொறு மஞ்சந்
தவழ்ந்திடும் வல்லமா நகரிற்
குருகினங் குலாவும் மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
மருவலர் கடப்பந் தொடையணிமார்பா
மனங்குடி புகுந்தமா யூரா
இருவினைப்பாச மொருவிடவந்து
னிணையடித் துணையுவந் தருளே. (௫)

வஞ்சக மாய நெஞ்சினர் காணு
வள்ளலாய் வல்லமா நகரிற்
குஞ்சன முரங்கு மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
பஞ்சினிற் பாடுபடும்பழ வினையேன்
பயமெலாம் பற்றறப் பாற்றிக்

கஞ்சமே யாய கழன்மல ரடியேன்
கண்டுகெண் களித்திட வருளே. (௬)

சங்கமுத் தமிழும் பொங்குசன் மார்க்கந்
தழைத்திடு வல்லமா நகரிற்
குங்குமம் போதும் மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
அங்கியை மூலத் தெழுப்பியுண் மதியி
லபர்வறச் செலுத்திட வமுதந்
தங்கியே யுண்ணுந் தத்துவங் காட்டத்
தண்ணடி யென்றனக் கருளே. (௭)

சிவமெனும் பொருளே நவவடி வெனவே
தெளிந்திடும் வல்லமா நகரிற்
குவலயம் போற்றும் மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
தவமிலை யான தத்துவா தீதத்
தனிப்பிழம் பாகிய வெளியிற்
பவமல மாய விரண்டறக் கலக்கப்
பாதமென் மீதுவைத் தருளே (௮)

உருக்குபொற் கிட்டான் கிடக்குமா மலையா
லொளிர்தரும் வல்லமாநகரிற்
குரத்துட னலைக்கு மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா

வருக்கைமா கதலிக் கனித்திரள் பிழிந்து
வடித்ததிற் பானமுங் கண்டும்
பொருத்திநெய் சேர்த்தே திரட்டிய வமுதம்
போலுமுன் றுளையெற் கருளே. (௬)

நீலமார் மஞ்சண் மரகத முதலா
நிலாமலை வல்லமா நகரிற்
கோலமார் தெய்வ மணிமுத்தக் கரையின்
கோயில்வாழ் பழனியெங் குமரா
பாலபி ஷேகந் தினமுஞ்செய் தன்பர்
பராவிடுங் கட்டிமாம் பழமே
காலனு ரென்முன் வராமலே நினது
கழன்மலர மழலையெற் கருளே. (௭)

உ

மயிலுமயிலுந்துணை.

வல்லமாநகர் மணிமுத்தாநதிச் சுப்பிரமணியர்

வெண்பாப்பத்து.

விநாயகர் காப்பு வெண்பா.

திங்களணி பொங்கர்வல்லச் சீர்மணிமுத் தாநதிவாழ்
மங்களஞ்சே ருஞ்சுப்ர மண்யற்குப்—பொங்குதமிழ்
வெண்பாப்பத் தோத விநாயகவே ழக்கன் று
கண்பார்த் தருளுமொரு காப்பு.

தேர்கொண்ட தென்றற் சிலேவே ஞெலாவுபொழி
லேர்கொண்ட செல்வ மிலங்கு வல்லச்—சீர்கொண்ட
ஆத்தானக் கோயில்வள ரற்புதனே சுப்ரமண்யா
காத்தா ளடிமையெனைக் கண்டு. (க)

கண்டு சுரர்வணங்குங் கைவேலா வல்லநகர்
வண்டுரிஞ்சு தார்ச்சுப்ர மண்யகுகா—தொண்டுகொண்டு
காப்பாற்ற வேண்டுங் கடைப்பட்ட நாயேன்றன்
றீப்பாவ வல்வினையைத் தீர்த்து. (உ)

தீர்த்தா சிவதே சிகாபொற் சிகாவளமே
லார்த்தா யணிவல்லத் தாறுமுகா—மார்த்தாண்ட
ஞானசுப்ர மண்யா நயமுறநீ கூறுறுதி
யானவருள் செய்வா யடுத்து. (ங)

அடுத்துநின்று போற்றி யகமுருகு நாயேன்
மடுத்த பயத்தால் வருந்த—விடுத்தனையே
யன்பழகா வல்லநக ராற்றங் கரைக்கந்தா
நின்பதமே நன்பினன்வா நேர். (ச)

நேரார் தொலையநிமிர்வே லனுப்பிப்பொன்
னூராரைக் காத்தனையென் றேதுபுகழ்ச்—சீரார்ந்த
தாமரைப்பூ வாவித் தடவல்ல மாநகரின்
மாமயிலா வென்னையுங்கா வந்து. (ரு)

வந்து கவலை வளர மிடிநெருக்கச்
சிந்தைநொந்தே னீது தெரியாதா—சந்ததமுஞ்
சுப்ர சொரூபமிகு சோதிப்புல் வல்லநகர்ச்
சுப்ரமண்யா வேதேனுஞ் சொல். (௬)

சொல்வாழ்வு பொய்யுனது தாயவருளேமெய்யாஞ்
செல்வா வெனதுகுல தெய்வமே—கல்வாய்ந்த
நெஞ்சரறி யாத நிதியேவல் லப்பதியே
யஞ்சலென்று காப்பதுபின் னூர். (௭)

ஆராயுங் கீர்த்தி யருள்வல்ல மாநகரிற்
பாரார் விண் ணோரெவரும் பாராட்டச்—சோராத
தண்ணருள்கூர் சுப்ரமண்யா தாய்தந்தை சற்குருநீ
யெண்ணமிசைந் தாள்வா யினி. (௮)

இனியமொழி யுஞ்சொல்லா வீனர்பின்னே சென்று
தனியலைந்து வாடித் தவித்தேன்—மனநடுங்கப்
பாராதே சுப்ரமண்யா பத்தர்களெல் லாமடைந்த
சீரான நல்வழியைச் செப்பு. (௯)

செப்புத் தனவள்ளி சேர்குமரா வல்லநகர்ச்
சுப்ரமண்யா நின்னையன்றித் துட்டர்களை—யறப்பண்
கருதுகில்லேன் காண்பதெந்நாள் கன்னியரோ டுன்சீர்த்
திருவிழா வின்பவனித் தேர். (௰)

உ

வல்லமாநகர் மணிமுத்தாநதிச் சுப்பிரமணியர்
கலித்துறைப்பத்து.

காப்பு வெண்பா.

உலகம் பரவவொளிர்வல்ல மென்னுந்
தலமொன் றியமணிமுத் தப்பேர்—நலநதியின்
மேற்குமுக மாய்விளங்கும் வேலவனைப் பாடவருள்
மாற்கரட மாமுகவா வந்து.

கட்டளைக் கலித்துறை.

சீராரு மாமயி லேறி யருளிய சேவகனே
நாராளும் வல்ல நகர்மணிமுத்த நதிக்கந்தனே
ஏராளமானநல் லற்புதம் நீசெய்யு மிக்கலியிற்
றூராள மாநிதி தந்தருளெற்குத் தழைத்திடவே. (க)

வேதியனேமுன் னநாதியனே வல்ல மேற்கில்லை
மோதிய நீர்மணி முத்த நதிக்கரை முன்னவனே
சோதிய னேயநு பூதியனேயெனைத் தொண்டுகொண்டுஞ்
சோதியனேமம் விடேனிது சத்தியஞ் சொல்லினனே. (உ)

சொல்விளை தண்வயல் வல்லநகரினைச் சூழ்ந்துவரும்
பல்வளை முத்தநதிக்கரை வாழ்தண்ட பாணியனே
வல்வினை யாக்கைக் குடம்பையுட் பட்டு வருந்திநெறி
யில்வழி நின்றிடு மென்னையுங் காக்க விடரொழித்தே. (ந)

இடராதி மாயை தொடராது துன்பங்க ளேழையென்மேற்
படராது செய்யும் பருவத்தை விட்டுப் பராமுகமாய்க்
கடல்சூழ் புவியினிற் பேசாதிருந்தனை கண்ணுதற்குத்
திடஞான மோது குகாவல்ல மேற்கிற் செழுஞ்சுடரே. (௪)

மேலான சீரியர் போலாது பொய்யை விரும்பியயான்
மாலாகி நின்றனக் காளாக வெண்ணினன் வாய்த்திடுமோ
பாலான நீர்மணி முத்தக் கரைத்தண்ட பாணியெனும்
வேலாயு தாவொரு காலாயு தக்கொடி விற்பனனே. (௫)

பன்னிறத் தோகையின் மன்னிவருந்தண்ட பாணியனே
பொன்னையுண் டாக்கிப்பொன் னாசையைப் போக்கினர் போற்றுகின்ற
நன்னிதி சேர்வல்லத் தின்மணி முத்த நதிக்கரைவா
ழுன்னடி நம்பின னென்னைவிடேல்பவ மோவுதற்கே. (௬)

கேவல ஞானங் கிடைப்பதற் கேயிங் கிதமிகுந்த
பூவையர் பான்மன மேவ விடாதுன்றன் பொற்பதத்திற்
பாவலர் போலிங்குப் பாடவந் தேனையும் பார்த்தருளாய்
காவலர் வல்ல மணிமுத்த வாற்றங் கரைக்கந்தனே. (௭)

கரையாதநெஞ்சப் புரைபேணக்கொஞ்சங் கனியவைத்துன்
விரையாரும் பாதத் துரையாரும் பாடல் விளம்பவைத்த
துரையாகி வல்ல நகர்மேவு மாற்றின் றுறைக்கணுறை
யரசே யெனைவிடிலோபழி யேநின் னருளுக்கன்றே (௮)

அன்றோர் வயிற்று வலிகொண்டவற்கரு ளாண்டவனீ[போ
யென்றோர் பவர்க்கு மல்லாருக்குங்காட்டினைபென்பதைப்
பின்றே பவப்பிணி யாதியைத்தீர்த்தரு ளென்னவந்து
மன்றுடி னேனரு ளாய்வல்லமேற்கில் வளர்கந்தனே (சு)

கந்தா கடம்ப வடிவேல வாவருட் கண்ணுடைய
நந்தா மணிவிளக் கேசினி யேயென்று நாடவருள்
தந்தாயிவ் வேளை தயங்குகின்றேன்பரி தாபங்கண்டு
சிந்தா குலங்களைத் தீர்வல்ல மேற்கினிற் சீரியனே. (எ)

உ

மயிலுமயிலுந்துணை

வல்லமாநகர் மணிமுத்தாநதிச் சுப்பிரமணியர்

சந்தக்கவிப்பத்து.

காப்பு வெண்பா,

பூமலருஞ் சோலை பொலிந்தவல்ல மாநகரின்
மாமணிமுத் தக்கரையில் வாழுகின்ற—தேமலருங்
கந்தப்பன் சந்தக் கவிக்கருளுங் கைக்கொளுமோர்
தந்தத்தந் திக்கழலே சார்ந்து.

சந்தக்குறிப்பு.

தனனா தனனா தந்தத் தனதன
தனனா தனனா தந்தத் தனதன
தனனா தனனா தந்தத் தனதன தனதானா

கடல்சூழ் புவிமேல் வஞ்சித் தலைபவ
ருடனே திரியா துன்பொற் பதமலர்
கதிதா னெனநா டும்பத் தரையுற வடையேனோ

கவிவா ணரையே கண்டிட் சினமுறு
குணலோபிகள்பா லண்டிப் பொருளது
கருதா வகையோ ரின்பத் திருவினை நணுகேனோ

அடலார் சிவஞா னம்பெற் றவர்மொழி
யருள்வா சகமோ தும்பெற் றியினொடு
மணிமா மனைவாழ் வும்பெற் றிடவர முறுவேனோ

அமர்வே லுடனார் பைம்பொற் சிகியையு
நவிலோர் கிளிபோல் விஞ்சைத் தமிழ்தர
வறியேன் விழிநேர் முந்தித் தரிசன மருள்வாயே

இடமே யெனையா ளுஞ்சத் தியமரும்
வடிவோ னெனுமீ சன்கட் பிரணவ
மிதுவே யெனவாய் விண்டற் புதமிக வருபாலா

எதிர்சூர் குலமோ டும்பட் டழிவுற
முதிர்சேவ கமே யும்பர்க் கினிதென
வெழுகா ரணனே யெங்கட் கொருமுத லெனுவாழ்வே

திடமா தவர்சூ ழெஞ்சற் குருவென
வளர்மா வருளா னந்தத் தவர்பணி
தெருளே திசையோர் கும்பிட் டுயுமெழின் முருகோனே
திருமான் மருகா தொண்டர்க் கருடர
வலமா நகர்வா ழும்பொற் புயர்குக
திகழா றுமுகா கந்தப் பெயர்புனை பெருமாளே. (க)

சந்தக்குறிப்பு.

தய்யத்தா தனதன தத்த
தய்யத்தா தனதன தத்த
தய்யத்தா தனதன தத்த தனதான

அல்லிற்கூர் குழனறு மட்டின்
முல்லைத்தார் குலவவி சைத்த
வள்ளற்பூண் முலையெனும் வெற்பு மடமானர்
அவ்வப்போ துதவுமு யக்க
முள்ளித்தீ யவர்தரு நட்பி
னல்லற்பாழ் மிடியிடி பட்ட தொழியேனே
சொல்லக்கா ரணமதொ ழித்த
வுள்வெப்பா கியமய லுற்ற
தொல்லைப்பா தகமெனை விட்டு விலாகாதோ
துள்ளிப்பாய் திருவைய யிற்கை
தெவ்வுப்போர் மயிலொடு செச்சை
தொய்யற்றோ ளறுமுக மொட்க வருவாயே

கல்விக்கே கொடையருண் மிக்க
செல்வத்தா யுமைமகிழ் புத்ர
கவ்வைப்பா தகர்தெரி வற்ற முருகேசா

கைகைக்கா வவளுரை பற்றி
யெய்திக்கா னவுணரை யட்ட
கைவிற்கார் முகிலுள மெச்சு மருகோனே

வல்லிற்சேர் தருதன முற்ற
பள்ளக்கா ரிகைகளே கட்ட
மல்லற்சீ ருறுபயிர் தொக்க முதுசீரூர்

வல்லத்தே நதிமணி முத்த
வெள்ளத்தே சிவிகைந டத்து
வள்ளற்பூ ரணகுரு முத்தர் பெருமாளே (உ)

சந்தக்குறிப்பு.

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தன தந்தன தந்தன தந்தன தனதான

மங்குலெ னுங்குழ னங்கைய ரின்பமெ
னுங்கட லின்கண மிழ்ந்திம னந்தனில்
வன்றுயர் பொங்கிவ ருந்தி மயங்கிட லடையாமே

வந்திகள் விண்டரு ளுங்கனி யின்சுவை
வண்டமி ழின்றொடை யன்பொடுகொண்டு
வணங்கு திறங்கெழு தொண்டரை யஞ்சலி புரிவேனோ

எங்களை வஞ்சகர் நிந்தை புரிந்ததை
யுன்றனி டஞ்சொல வொன்று மொழிந்திலை
யென்று விளம்பி யழுங்குர லுன்செவி நுழையாதோ
இந்த்ரம டந்தையு டன்குற நங்கைவி
ரும்பிய மென்பத முந்திகழும் பணி
ரண்டுக ரங்கண் மிகுஞ்சொரு பங்கொடு வருவாயே
இந்து முயங்கிய செஞ்சடை யும்பட
நஞ்சர வின்பணி யுந்தலை யந்தொடை
யின்புய முங்கிளர் சங்கரர் தம்புதல் வனுமாகி
இண்டைய லர்ந்தத டந்தனி லஞ்சமெ
முந்துய ருஞ்சுவ ரின்கண் விளங்க
விடங்க ரலம்ப விலங்குவ லந்தனி லுறைதேவே
கொங்கு நிறைந்த விலங்கை நுழைந்தர
சன்படை கண்டும ருண்டு வெருண்ட
குரங்குகண் முன்பவ னுங்கெடவென்றவன் மருகோனே
கொண்ட றவழ்ந்துல வும்பொழில் வண்டரி
னந்திமிர் தொங்க லணிந்த தடம்புய
கும்பனு யும்படி யன்றரு ளுங்குரு முருகோனே. (௩)

சந்தக்குறிப்பு.

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தானதந்தன தானதந்தன தனதனா

மாயமிஞ்சிய காரி யம்பல
நேர்பு ரிந்துடல் வாடிநின்று
மகாகொடும்பிழை யேவழங்கிய மதியாலே

மாலையும்புலர் காலையுந்தெரு
வாயில்வந்துல வாமடந்தையர்
மாலையம்பணி யான்மயங்கியு மவர்பாலே

காயும்வெம்பவ நோயுடன்பல
மானவஞ்சக மாதியுங் கெடு
காமமும்புலை லோபமும் பெறு வதுதீரக்

காவல்கொண்ட மயூரமுங்கொடி
யாதியுங்குற மாதுகுஞ்சரி
காமர்தங்கிய சேவையுந்தர வருவாயே

தீயுமிழ்ந்திடு கோபம்விஞ்சுகி
ராதர்புண்பட வேல்விடும்பர
தேசியென்றடி யார்தினந்தொழ வலம்வாழ்வாய்

தேயமெங்கணு மேபுகழ்ந்திடு
மாதுநின்பெய ரேமொழிந்தவி
சேடமுங்கொடு நேரில்வந்தவண் மணவாளன்

மேயதென்கர வோவிளம்பிடெ
னுவுடன்கர மேதடிந்தவவ்
வீணனங்கவ னேமடிந்திட வருபோதின்

மேலுமங்கில்ய தானமுந்தர
வேணுமென்றவ ளேயிரங்கிய
வேளையுந்தவ ருதுதந்தருள் பெருமாளே. (௪)

சந்தக்குறிப்பு.

தனதனன தான தந்த
தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான

நமதுகுல தேவ னென்று
வழிபடவு வேணு மென்று
நலமுடைய வாடு கொண்டு முனமேகி

நளிர்புனலி னோடு மஞ்ச
ளதனையதன் மேலிலங்க
நனையவிட வேகலங்கி முகம்வாடிக்

கமையுதறு போது தங்க
ளுடையனரு ளானதென்ற
கடிகையினி லேகடிந்துண் மடையோர்கள்

களியுறவு பேணி நேர்ந்தென்
மனமிடி படாது வந்து
கதியுதவு சேவைதந்து னருள்கூர்க

இமயமலை ராஜனன்று
    தருகுமரி யாண்மகிழ்ந்த
விளையகும ராகடம்ப முருகேசா

எதிர்முடுகி யோடிவந்த
    வசுரரொடு சூர்தடிந்த
விமையவர் சகாயனென்ற வடிவேலா

மமதையுட னேகலிந்த
    வழுதியுட னேயடங்க
மதுரமொழி வாய்மலர்ந்த குருநாதா

வலநகரி லேவிளங்கு
    மணிநதியி லேயெழுந்த
வடிவுடைய சோதி பொங்கு பெருமாளே

சந்தக்குறிப்பு

தானன தன்னன தத்தன தத்தன
    தானன தன்னன தத்தன தத்தன
தானன தன்னன தத்தன தத்தன தனதான

மானின மென்னும் விழிக்சய லுற்றவர்
    வாரிடு வண்ண மிகுத்தத னத்தியர்
வாயிலை யண்ணிமி னுக்கும டக்கொடி யனமானார்

வாயித முண்ணுநி னைப்பொடு வெட்கமு
மானமு மிம்மியி லற்பமு முட்கொளு
மாறில ரென்னவெ ளிப்படு துட்டரி லலையாமே

தேனமு தன்னத மிழ்க்கவி செப்பிடு
நாவல வுண்மைமி குத்தவர் நட்பொடு
சீருறு தன்மம னத்தையு முற்றிட வருள்வாயோ

சீவனை யிம்மைமவ ளர்த்தரு ணற்றவ
மேவிய நன்மை பெறற்குன ருட்புகழ்
தேடிய புண்யமெ னக்குமி கத்தர வருவாயே

மேனிலை நண்ணும்வெ ளிச்சம திற்றின
மாடிய கண்ணிய சித்தமு ருக்கினர்
மீதுடன் விண்ணவர் மெச்சுப தத்தினை யருள்வோனே

வீரமு டன்மலை யெட்டுமெ டுத்தெறி
சூரனு டன்மலை கெட்ட நடத்தையர்
மேல்விடு பொன்மய ரத்நமி ழைத்தவொர் வடிவேலா

வானுல வும்மதி பட்டுமி குத்தெழு
சீதர பன்னிய வுப்பரி கைக்குள
வாவிய கன்னியர் சித்தமு மொட்டியு பொழிபாடன்

மாமறை யன்னமு கைத்தவன் மெச்சிடு
சீர்வல மன்னிய முத்த நதிக்கரை
வாயிலின் முன்னுள சித்ரம யிற்குக முருகோனே

தனந்த தத்தன தான தனதன
தனந்ததத்தன தான தனதன
தனந்ததத்தன தான தனதன — தனதான

அனந்தசித்திர மாயாவி லாசமு
விடுஞ்சகத்தினி லேதேது மூழ்கிய
வகந்தையற்பனி யான்மீள்வ தோவென — வளர்பாச

மறும்படிக்கொரு ஞானோப தேசமு
நிறைந்த சற்குண மாநேசர் சூழ்சபை
யமைந்திருக்கும காவாழ்வு மேபெற — நினைவாகும்

இனம்பகைத்திடு கோளோதி யேவியு
மடம் படைத்தவர் வீடடு வாசலி
னிடம்பெருக்கிட வீண்வாது கூறிய — மடலோபர்

இசைந்ததுர்க்குண மேலாகி டாதுட
னிடும்பனுக்குட னீயோத நானிவ
ணிடும்பையற்றசு காதார மேவவு — மருள்கூர்க

நனந்தலைப்புவி யாகாசம் யாவையும்
விரைந்து சுற்றிடு மாயூரம்வாரணம்
நபந்துகைத்திடு வீரா தபோதனர் — மனதூடு

நடும்பதத்தவ வேலாயு தாகட
லெழும்பியுற்றட ராலாலவுணினர்
நலஞ்சொலப்பகர் மாதாரகாசர — வணவாவி

வணந்தரப் பொறி யாறுன மாமுக
    மிலங்குசுப்பிர சோதீ கையானன
வலன்படப்பொரு கோடேய் கையானவிர் துணையான

வலந்திருப்பெயர் தானுனவூரிடை
    துலங்கு நித்திய கோலாக லாபரி
மணந்தி ருத்திகொள் ஞானுகராவளர் பெருமாளே. (எ)

சந்தக்குறிப்பு.

தந்தத்தா தந்நன தந்தன
    தந்தத்தா தந்தன தந்தன
தந்தத்தா தந்தன தந்தன தனதான

வஞ்சத்தா லும்பல சஞ்சல
    மிஞ்சப்பா வம்புரி கின்ற
மடந்தைக்கா ளென்றும யங்கிய வடிநாயேன்

வம்புக்கா மங்கொள வந்தவு
    டம்புக்கே யுஞ்சுக மின்றி
வருந்திக்கூ வுங்கோணி நின்செவி நுழையாதோ

பஞ்சைப்போ லும்படு கின்றவெ
    னெஞ்சுக்கே நின்சுகம் விஞ்சிய
பண்பைச்சே ரும்படி யன்பினை யருளாயோ

பந்தப்பா சந்தவி ரும்படி
யுன்பொற்பா தம்பெற வுன்சொரு
பஞ்சற்றே னுங்கன வின்கணில் வரவேணும்

கஞ்சத்தே வண்டார்கு டைந்திட
விஞ்சித்தேன் மண்டிவழிந்திடு
கஞ்சத்தே கெண்டையெழுஞ்சர வணவாவிக்

கங்கைத்தாய் தந்தரு ளுஞ்சுத
னென்றெப்பா ருந்தொழ நண்பருள்
கந்தப்பா குஞ்சரி ரஞ்சன மனமோகா

மஞ்சிற்று ளுங்குழ லப்பிகை
யந்தக்கா னந்திகழ் குன்றவர்
மங்கைக்கோ லங்கொள விந்திரன் மகனேரில்

வந்தச்சேய் தன்படி வங்கொளு
மன்றற்றூர் தங்கிய சுந்தர
வந்திப்பார் தங்கள்வ லங்கிளர் பெருமாளே. (அ)

சந்தக்குறிப்பு.

தானதன தானதன
தானதன தானதன
தானதன தானதன தந்ததான

பூதரம தேபொருவு
மாதர்தன மேகயிலே
போலுமென வேகினையு நெஞ்சினாலே

போகசுக நீடிமய
லேபெருக மூளையுறு
பூரணநி லாவெர்ளிகு றைந்ததாலே

பாதசுநி லாவிவரு
நீரிழிவு காசமொடு
பாசமுறு சூலைபல தந்தநோயே

பாலகவி நானடைகி
லாதருளி வாழ்வுதரு
பாரமயி லேறியிவண் வந்துசேர்வாய்

வேதனொடு மாலரிவி
ணாடர்பணி தேசிக
விநோதமலர் சேவடிவி ளங்குமேவோனே

மேலும்வளர் கீரனுரை
யேகொடொரு பூதமுனம்
வீயவருள் வீரியனை னுங்குகேசா

மாதவரு நாவலரு
மூதறிவி னோடுதொழு
வாலையருள் பாலனென நந்துசீலா

மாகனக ராசரடி
    பேணும்வல மாநகரில்
மாயணியு லாநதிய யர்ந்தவேளே (கூ)

சந்தக்குறிப்பு.

தந்த தந்தன தந்த தந்தன
தந்த தந்தன தந்த தந்தன
தந்த தந்தன தந்த தந்தன—தனதானா.

கந்த மிஞ்சிய சந்த னந்திமிர்
    கொங்கை கொண்டுது லங்குமங்கையர்
கண்க ளென்றிடு மம்பு கண்டுள மருளாதே

கஞ்சி யும்பிறர் கெஞ்ச வெம்பசி
    யென்ற றிந்தும்வ ழங்க லெஞ்சிய
கங்கு னெஞ்சினர் தங்க ளின்புற கலையாதே

சிந்தை வெம்பிமு ரண்ட வஞ்சனை
    விஞ்சு பந்துச னங்கள் முன்புயர்
சிங்க மென்றுந டந்து வெம்பகை களையேனோ

திண்பு யம்பனி ரண்டு தொங்கலெ
    னுங்க டம்புசி கண்டி குஞ்சரி
செஞ்சொ லின்குற நங்கை பங்குடன் வருவாயே

வந்து றுஞ்செழி யன்சு ரந்திரு
    வெண்செ ழும்பொடி மந்தி ரந்தனின்
மங்க வன்றரு ளும்பெ ருந்தகை யுடையோனே

வட்புகொண்டச மண்குலங்கழு
வுந்தவென்றுசி வன்பகர்ந்த
வரம்பொ ருந்திய சண்பையப்பதி யவதாரா

கொந்தலர்ந்தன நந்தனங்களில்
வண்டெழுந்துக ளுண்டனந்த
குணந்த ரும்பண்வ ழங்க வும்புலர் தருகாலைக்

கும்பிடுந்தவ மிஞ்சுகின்றவல்
லந்திகழ்ந்து விளங்குகின்ற
குறிஞ்சிநண்ப குழந்தையென்றிடு பெருமாளே (ய)

வாழ்த்து.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகுயிர்கள் வாழியருட் சிவபெருமான் வாழி
யுமையம்மை வாழிவிநா யகன்கந்தன் வாழி
நிலவுதிருத் தொண்டுசெயு நெறியாளர் வாழி
நிலவலய நொடியில்வலம் வருமயிலும் வாழி
சுலவுகதிர் வேல்வாழி கொடிச்சேவல் வாழி
சுரர்மகிழுந் திருப்பணியைப் புரியுமவர் வாழி
நலமுலவு தோத்திரமஞ் சரியிந்நூல் வாழி
நன்குயர ஸிங்கமருஞ் சங்கமும்வா ழியவே

முற்றிற்று.

௨

வீரவாகுதேவர்.

கலிவிருத்தம்.

சீரவாவு செழும்பொழி லின்கணே
காரவாவு கவின்வல்ல மாநகர்
வாரவாவு மணிமுத்தக் கோயில்வாழ்
வீரவாகுவை வேண்டிவணங்குவாம்.

புற்றிடும்பன்.

கலிவிருத்தம்.

கற்றிடுங்கழ கஞ்செறி வல்லத்தி
லெற்றிடுந்திரை யெய்முத்த மாநதி
யுற்றிடுங்கரை யுள்ளபொற் கோயிலின்
புற்றிடும்பன் பொலன்கழல் போற்றுவாம்.

உ

மயிலு மயிலுந்துணை.

விஞ்ஞாபனம்.

தவசித்தி நகரம், கவுதமராச்சிரமம், வச்சிரேச்சுரம், இந்திரபுரம், வல்லையம்பதி, வலாசுரபுரி எனும் பலகாரணத் திருப்பெயர்களை வாய்ந்த திவ்ய க்ஷேத்திரமாகியும், இந்திரனது சாபம் விமோசனமாகச் சிவபெருமான் அருளிய வண்ணம் அன்னான் வச்சிராயுதத்தினுற் பாதாள கங்கை முதலான கங்கைகளையெல்லாம் வரவழைத்து மூழ்கி யுய்யப்பட்டதும், கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் மூழ்கியெழுந்து பணிபவர்களுடைய முற்பவ வினைகளையெல்லாம் அடியோடு போக்கிச் சிவசாயுச்சியத்தை எய்துவிப்பதுமாகிய வச்சிரதீர்த்தமென்னும் தீர்த்தத்தை யுடையதும், கவுதமர் முதலாயினோரால் பூசிக்கப்பட்டதும், சித்தர்களெல்லாம் பொன்னுருக்கிச் சித்தாடியதாக இன்றுங்காட்சிப்பிரமாணங்களினுற் காட்டக்கூடியதாகிய பொற்கிட்டான், வெள்ளை, மதுவர்ணம், நீலம், செவந்தி, பச்சை முதலாய படிகக்கற்கள் எடுக்கப்படுகிற மூர்த்தி மாமலையென்னும் இந்திரகில பர்வதத்தை யுடையதும், சோதிப்புல் மிகு இருளிற்றெரியக்கூடியதும், நமதுள்ளம் புகுந்த சமயாசாரிய மூர்த்திகள் திருவாய் மலர்ந்த தேவாரத்து வைப்புத்தலங்களிலொன்றாயதும், புராதீன அரசர்களால் ஆட்சிபுரிந்த மாட்சியைக் காட்டுங் கோட்டை, யகழி முத

லியவைகளையுடையதும், இதற்குப் பிரமாணம் இறையனு ரகப்பொருளுரையில் நக்கீரர் காட்டியருளிய மேற்கோளில் "மண்ணிவர் செங்கோல்வரோதயன் வல்லத்து மாற் றலற்க" என்றும், நாணிக்கண்புதைத்தல் ஒருதுறைக் கோவை முதற்செய்யுளில் "சேலங்கைக் கொண்டுயர் வல்ல மென்பா" லென்றும் கூறப்பட்டுள்ளதும் இன்னும் நீர்வளம் நிலவளம் முதலியவைகளால் இதற்கிணை யெங் குமில்லையெனப் பேர்பெற்றதுமாகிய, வல்லமாநகரத்தின் மேற்புறத்தில் உத்திரவாகினியாய் ஓடி வரும் மணி முத்தாநதி என்னுந் தீர்த்தத்தின் கீழ்க்கரையில் மேற்கு முகமாயெழுந்தருளித் தற்காலம் அளவற்ற அற்புதத்திரு விளையாடல் புரிந்து எண்ணில்லாச் சனங்களுக்குத் தீராத வியாதிகளை யெல்லாந்தீர்த்து அருட்சித்தி விளக்கும் நமது தெண்டாயுதபாணியாகிய சுப்பிரமணியக்கடவுளுக்கு மூன்று காலமுந்தவறாது நித்தியநைமித்தியங்கள் நடந்து வரும்படி க்கும் திருக்கோயிலை இன்னும் விஸ்தாரமாகத் திருப்பணி வேலைகளை நடத்துவதற்கும் எண்ணியபடி நிறைவேற்றிவை க்கத் திருவளைச் சிந்திக்கின்றோம்.

இந்த வல்லமாநகரின் ஸ்தல புராணத்தையும் தஞ்சா வூர் அரண்மனை சரஸ்வதி மாலிலிருந்து தெரிந்தெடுத்து வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துத் தமிழ்ப் புராண மாகவல்லம் பாலகவி நமசிவாயப் பிள்ளை பாடிக்கொண்டு வருகின்றனர்.
